பொன்னமராவதி தாலுக்கா அமைத்தல்.

140—(*வினா எண். 987)—திரு. வ. சுப்பையா: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொன்னமராவதியைத் தலைமையிடமாகக் கொண்டு தாலுக்கா அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்: தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) அரசின் ஆய்வில் உள்ளது.

திரு. வ. சுப்பையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொன்னமராவதியைத் தலையையிடமாகக் கொண்டு அமைக்கப்படவிருக்கிற தாலுக்காவில் 3 ஊராட்சி ஒன்றியங்கள் இருக்கின்றன. மேலும், அது 43 பஞ்சாயத்துக்களைக் கொண்டது. சுமார் ஒரு இலட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் தொகை கொண்டது. 7 உயர்நிலைப் பள்ளிகளையும், 3 மேல்நிலைப் பள்ளிகளையும், தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளையும், மாநில வங்கிகளையும் காவல் நிலையங்களையும், பல்வேறு அரசுப் பணியிடங்களையும் கொண்டது. இப்போது செயல்பட்டு வருகின்ற திருமயம் தாலுக்காவிற்கும் பொன்னமராவதிக்கும் இடைப்பட்ட தூரம் 30 கிலோ மீட்டர். ஆகவே, அந்தப் பகுதிக்கு சென்றுவர, அந்தத் தாலுக்காவுக்குச் சென்றுவர சிரமமாக இருக்கிற காரணத்தால் வெகு விரைவிலேயே பொன்னமராவதித் தாலுக்காவை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்: புதுக்கோட்டை மாவட்டப் பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கேட்ட கேள்விக்கு எனது பதில் புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள திருமயம் வட்டத்தைப் பிரித்து பொன்னமராவதியைத் தலைமையிடமாகக் கொண்ட ஒரு புதிய வட்டம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளது (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பழைய கோட்டைத் தலைவர் என்று சொன்னால் பொருத்தமாக இருக்குமா?

திரு. மா. சுந்தரதாஸ்: தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தங்களை புதுக்கோட்டை மாவட்டப் பேரவைத் தலைவர் என்று குறிப்பிட்டார்கள். பேரவைத் தலைவரை அப்படி குறிப்பிடலாமா?

1989 ஏப்ரல் 27]

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்.: புதுக்கோட்டை மாவட்டத்தில் என்று சொன்னேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : புதுக்கோட்டை கமா மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, .என்று பொருள் கொள்ள வேண்டும், இதற்கு கொண்டுகூட்டுப் பொருள் ''கோள்'' என்று பெயர், அந்த.முறையிலே வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் பதில் சொல்லியிருக்கிறார்கள.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்.: தலைவரவர்களே, நான் தொடரலாமா ? பொன்னமராவதி பற்றிய விவரங்களை இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். 130 வருவாய் கிராமங்கள் உள்ள பகுதி அது, வருவாய் வட்டங்களின் எண்ணிக்கை 6, அதைப் படிக்க வேண்டுமென்று விரும்பினால் படிக்கிறேன், ஆக, தற்போது திருமயம் வட்டத்தில் திருமயம், அரிமளம், பொன்னமராவதி ஆகிய மூன்று ஊராட்சி ஒன்றியங்கள் உள்ளன. பொன்னமராவதி ஒன்றிய கிராமங்கள் உள்ளிட்ட பொன்னமராவதி பேரூராட்சியைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய வட்டம் ஏற்படுத்த மாவட்ட ஆட்சியர் கருத்துத் தெரிவித்திருக்கிறார். சிரமங்கள் எனக்குப் புரிகின்றன. பொன்னமராவதியைத் தலைமையிடமாகக் கொண்டு அமைக்கபபடுகிற அந்த வட்டம் சரியாக இருக்குமென்ற பரிந்துரையை மாவட்ட ஆட்சியர் முன்மொழிந்திருக்கிறார், அதற்காகும் செலவு அரசுக்கு 3.14 இலட்சம் ரூபாய் தொடர் செலவும், 41.40 இலட்சம் ரூபாய் தொடராச் செலவும் ஏற்படும்.

திருமயம் வட்டத்தைப் பிரிப்பது பற்றிய கருத்துரு அரசின் ஆய்வில் உள்ளது. 18 வயது பூர்த்தியானவர்கள் அனைவரையும் வாக்காளர் பட்டியலில் சேர்க்கும் பணி நடைபெற்றுவருவதில் அப்போதிருந்த சிரமம் காரணமாக, தேர்தல் கமிஷன் தடை ஆணை பிறப்பித்ததன் விளைவாகச் செயல்பட முடியவில்லை. இந்தத் தடை ஆணை விலக்கப்பட்டபின் இந்தக் கருத்துருவை அரசு பரிசீலனை செய்து ஆவன செய்யும் என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வ. சுப்பையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்களுக்கு பொன்னமராவதி பகுதி மக்களின் சார்பாக நான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது தமிழகத்திலுள்ள சட்டமன்றத் தொகுதிகள் 234. ஆகவே .ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினருக்கும் ஒரு தாசில்தார் என்ற முறையில் நம்முடைய சட்டத்தைத் திருத்தி தாலுக்காக்கள் ஏற்படுத்தப்படுமா ?

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : பேரவைத் தலைவர் அவர்களே, சட்டத்தைத் திருத்துகிற நேரம் வரும் போது திருத்துவோம். (சிரிப்பு).

நகர பேருந்து விடுதல்.

141—*(வினா எண். 225)—திரு. துரை சந்திரசேகரன், மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருக்காட்டுப்பள்ளி, திருவையாறு, ஆகிய இடங்களை மையமாகக் கொண்டு எல்லா கிராமங்களுக்கும் நகரப பேருந்து விடும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே,

(அ) ஆம், திருக்காட்டுப்பள்ளி மற்றும் திருவையாறு ஆகிய இடங்களில் கிளை துவங்க திட்டமுளளது.

(ஆ) திருக்காட்டுப்பள்ளி :

திருக்காட்டுப்பள்ளியில் விஷ்ணம் பேட்டை கிராமத்தில் கிளை அமைக்க நிலம் கையகப்படுத்தும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

திருவையாறு :

திருவையாற்றில பணிமனை அமைக்க நிலம் கொடுக்க ஒருவரும் முன்வர மறுக்கின்றனா. தகுந்த நிலம் கிடைக்கப் பெற்றதும் கட்டுமானப் பணிகள் ஏற்கப்பட்டு புதிய பேருந்து இயக்கம் செயல்படுத்தப்படும்.

திரு. துரை சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இரண்டு இடங்களிலே கிளை துவங்க அனுமதித்ததற்காக திருவையாறு தொகுதி மக்களின் சார்பாக நன்றியை நான் தெரிவித்துக்கொள்கிறேன். திருவையாறில் நிலம் இல்லை என்று கூறினார்கள், தற்போது சத்திரம் நிர்வாகத்தில் 21 ஏக்கர் நிலம் தனியாரிடமிருந்து பெறப்பட்டுள்ளது. இதில் கிளை துவங்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலம் பற்றிய தகவலை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள கொடுத்ததற்காக நன்றி, தொடர் நடவடிக்கை மேற்கொளளப்படும்,